செய்தி வெளியீடு எண் : 97 நாள் : 11.01.2025

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (11.01.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழாவினையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் "புலம்பெயர் தமிழர்களின் தொழில் முயற்சியும் வளர்ச்சியும்” என்னும் தலைப்பில் ஆற்றிய உரை:**

**"எத்திசையும் தமிழணங்கே"** என்ற கருப்பொருளைத் தன் பொருளாய் கொண்டு, உலகத் தமிழர்களை ஒன்றிணைத்திருக்கும் அயலகத் தமிழர் தினத்தில், "புலம்பெயர் தமிழர்களின் தொழில் முயற்சியும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சராக உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என் முதற்கண் நன்றியினைத் தெரிவித்து வணங்கி மகிழ்கிறேன்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள வருகை புரிந்திருக்கும் சிப்காட் மேலாண்மை இயக்குநர்

திரு. K. செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்களே, சிங்கப்பூர் தொழில்முனைவோர்கள் திரு. முகம்மது ஜின்னா மற்றும் திரு. ஜெயபால் ராமசாமி அவர்களே, அமெரிக்க வாழ் திரு. பாலா பழனிச்சாமி மற்றும் திரு. நம்பிராஜன் வைத்திலிங்கம் அவர்களே, ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் கோபி அவர்களே, திரு. கணேஷ் ராதாகிருஷ்ணன் அவர்களே, சிறப்பு அழைப்பாளர் திரு. மணி சுந்தர் அவர்களே மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து தாயகத்திற்கு வருகை புரிந்துள்ள அனைத்துத் தமிழ் உறவுகளுக்கும் அருமையான மாலைப் பொழுதில் மகிழ்வான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அயலகத் தமிழர் தின விழாவில் உங்களிடம் பங்கெடுத்துப் பேசுவதில் நான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். ஏறு தழுவத் தொடங்கிய தமிழன் இன்று உலகம் தழுவத் தொடங்கியதால் "அயலகத் தமிழர் தினம்" கொண்டாடும் நிலை வந்துள்ளது.

கானாடுகாத்தானில் இருந்து தொடங்கிய கடல் கடந்த உங்களது தொழில்முனைவு – தற்போது கலிபோர்னியா வரை கால் பதித்திருப்பது தமிழரின் பெருமையாகும்.

தமிழர்கள் எங்கிருந்தாலும், எந்தச் சூழலிலும், எதையும் சாதிக்கும் திறன் மிக்கவர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை உலகிற்கு உணர்த்தும் விழா இது.

"தமிழகம்" என்ற ஒரு நிலத்திலிருந்து உலகம் எனும் பெரிய மேடைக்கு சென்றவர்கள் நீங்கள். உங்கள் முயற்சியும், உழைப்பும் மட்டுமின்றி, உங்கள் அடையாளமாகச் சேர்ந்த தமிழ் மொழி, கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை நீங்கள் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வது பாராட்டத்தக்க ஒன்று.

உங்களின் கண்டுபிடிப்புகள், நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கியமை, உலகளாவிய வளர்ச்சிக்கு ஒரு மாபெரும் பங்களிப்பாக விளங்குகிறது. முன்னொரு காலங்களில் மருத்துவத் துறையில் தொடங்கிய உங்களது மேலை நாட்டை நோக்கிய பயணம் தற்போது குறிப்பாக தொழில்நுட்ப துறையில் – சாஃப்ட்வேர் அபிவிருத்தி, ஆர்டிஃபிஷியல் இன்டலிஜன்ஸ் போன்றவற்றில் நீங்கள் சாதித்துள்ள இடத்தை உலகம் பாராட்டுகிறது.

இன்றைக்குத் தமிழர்கள் உலகின் பல முன்னணி நிறுவனங்களை வழிநடத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக, கூகுள் தலைமைச் செயல் அதிகாரி திரு. சுந்தர்பிச்சை, பெப்சி நிறுவனத்தின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாரி திருமதி. இந்திரா நூயி, திருமதி. ஜெயஸ்ரீ உல்லாள் உள்ளிட்ட எண்ணற்ற தமிழரின் முகங்கள் உலக அரங்கின் முக்கிய முகங்களாகத் திகழ்வதன் வழியாக தமிழினத்தின் திறமையை உலகம் அடையாளம் கண்டு கொண்டு இருக்கிறது.

ஆராய்ச்சி மற்றும் அறிவியல் துறையில் – உலகின் முன்னணி ஆய்வாளர்களாகவும், புதிய கண்டுபிடிப்புகளை வடிவமைக்கவும் நீங்கள் அசாத்திய திறனை வெளிப்படுத்தி வருகிறார்கள். உலக வர்த்தகத்தில் – முன்னணி வணிக நிறுவனங்களை நீங்கள் உருவாக்கியதோடு, தமிழர்களின் பொருளாதார சக்தியை உலக அளவில் அழுத்தமாகச் சொல்கின்றீர்கள்.

இன்றும் புதிய நிறுவனங்கள் (Startups) தொடங்குவதில் Silicon Valley–யில் மட்டுமல்லாமல் உலகளவில் அதிக தொழில் நிறுவனங்களை நீங்கள் தொடங்கிவுள்ளீர்கள். நீங்கள் தாய்நாட்டிற்கு அனுப்பும் நிதி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

உலக நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதியை தாய்நாட்டிற்கு அனுப்புகின்றனர். இந்த நிதி, தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, மாநிலத்தின் பொருளாதார அடித்தளத்தை உறுதியாக்குகிறது.

கடந்த பாதைகளும், சாதனைகளும் நீங்கள் முதன் முதலாக புலம்பெயர்ந்து சென்றபோது எதிர்கொண்ட தடைகள் இன்று நீங்கள் அடைந்த உயரத்துக்கு ஒரு அடிக்கல்லாக அமைந்திருக்கிறது. மொழி பெயர்ப்பு சிக்கல்கள், பண்பாட்டு வேறுபாடுகள், புதிய சூழல்களுக்கு உகந்த மாற்றங்கள் – என பல சவால்களை நீங்கள் கடந்து வந்ததற்கும் உங்களின் நம்பிக்கையும், உறுதியும் காரணம்.

தொடர்ந்து நீங்கள் உங்களது வேர்களை மறக்காமல், பிற நாட்டில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் ஆதரவாக இருப்பது உங்கள் பெருமையை காட்டுகிறது. தமிழகத்துடன் நீங்கள் கொண்டுள்ள ஒற்றுமை, உங்கள் பல தொழில் முயற்சிகளின் மூலமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், கல்வித்துறைக்கும்,

தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கும் மிக முக்கிய பங்களிப்பாக இருக்கிறது.

உங்கள் அனுபவங்கள் மற்றும் அறிவுகளை பின்தங்கிய பகுதிகளில் பகிர்ந்து, சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நீங்கள் இருக்கின்றீர்கள். தமிழகத்தில் உள்ள பல இளைஞர்களுக்கு வழிகாட்டியாக, அவர்களுடைய சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள உதவி செய்யும் ஒரு பிரதான சக்தியாக புலம்பெயர் தமிழர்கள் திகழ்கிறீர்கள்.

உலகெங்கும் பரவியுள்ள நீங்கள் – தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை தங்கள் அன்றாட வாழ்க்கையில் இருந்து தனித்தன்மையாக உயர்த்தி வருகிறீர்கள். உலகில் தமிழ் மொழியை பயில விரும்பும் எண்ணிக்கையும், தமிழ் கல்வி மையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க காரணம் நீங்கள்.

தமிழ் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்வுகள் மற்றும் தமிழ் தினக் கொண்டாட்டங்களை உலக நாடுகளில் நடத்தியுள்ள உங்களின் முயற்சி பாராட்டத்தக்கது. தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறையினர் பாதுகாத்து

வளர்ப்பதற்கான முன்னோடி முயற்சிகளை நீங்கள் செய்ய வேண்டும்.

புலம்பெயர் தொழில்முறைகளின் அனுபவங்களை தமிழ்நாட்டிற்கும், அதன்மூலம் இந்தியாவுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

அன்பிற்கினிய உலகத் தமிழர்களே, இந்த ஆண்டு அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கும் ஒவ்வொரு தமிழரும், தங்கள் வேர்களை மறக்காமல் உலகில் விழுதுகளைப் பரப்ப வேண்டும்.

தமிழர் உலகிற்குத் தந்த அருங்கொடைகளில் ஒன்று அறம் என்பது. அறமும், அறம் சார்ந்த வீரமுமே தமிழர்களின் புகழை நின்று நிலைபெறச் செய்வன. "உலகம் தழுவும் தமிழர்கள்" என்ற அடையாளத்துடன் தொடர்ந்து வளர்ச்சி பெறும் தமிழர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்!

உங்களின் அடுத்தடுத்த தலைமுறைகளும், தமிழோடும், தமிழர் பண்பாட்டோடும் என்றும் உறவாட வேண்டும் என்பதே எனது பெரும் விருப்பம்!

தமிழும், தமிழரும் உலகத்தின் மையப் புள்ளிகளாக இருக்கட்டும்!

நன்றி! வாழ்க தமிழ்!

வளர்க உலகத் தமிழர்கள்!

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu